051

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,

கல்வி முதுமாணி

இறுதிப் பரீட்சை 2007

**ESP 2313** – கல்வியில் ஆய்வு முறைகள்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 14.07.2007 நேரம்: மு.ப 9.30 - பி..ப 12.30

முதலாவது வினாவுக்கும் வேறு ஏதாவது மூன்று வினாக்களுக்கும் விடையளிக்கவும். ஓர் ஆய்வுப் பிரச்சினையை ஒரு வினாவுக்கு விடையளிக்க மட்டுமே உதாரணமாகப் பயன்படுத்தலாம்.

01. கல்வி தொடர்பாக நான்கு கருப்பொருட்கள்(அ - ஈ) கீழே தரப்பட்டுள்ளன. ஏதாவதொரு கருப்பொருளைத் தெரிவு செய்து கீழ்வரும் வினாக்களுக்கு (i – vii) விடையளிக்குக.

(அ) பாடசாலை மட்ட முகாமைத்துவமும் அதிபரின் வகிபங்கும்.

(ஆ) எல்லாப் பொதுப் பரீட்சைகளிலும் கணிதத்தில் உயர் சித்தியின்மை வீதம்.

(இ) இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் பாடசாலைகளில் பிரச்சினைகளும்.

(ஈ) ஒவ்வொரு பிள்ளைக்கும் ஆங்கில மொழிமூலக் கல்வி.

(i) மேலே தரப்பட்டுள்ள கருப்பொருட்களில் ஏதாவதொன்று தொடர்பாக குறிப்பான ஆய்வுப்பிரச்சினையொன்றை இனம்கண்டு கீழே தரப்பட்டுள்ள இடைவெளியில் எழுதுக.

(06 புள்ளிகள்)

கருப்பொருள்: ........................................................................................

பிரச்சினை: ........................................................................................

........................................................................................

........................................................................................

........................................................................................

........................................................................................

(ii) மேற்குறிப்பிட்ட ஆய்வுப்பிரச்சினையுடன் தொடர்புடையதாக மூன்று குறிப்பான ஆய்வு நோக்கங்கள்/வினாக்கள்/கருதுகோள்களை அமைக்குக.

(3 x 3 = 9 புள்ளிகள்)

1. ..........................................................................................................

2. ..........................................................................................................

3. ..........................................................................................................

(iii) தெரிவு செய்யப்பட்ட ஆய்வுப்பிரச்சினையை ஆய்வு செய்வதற்குப் பொருத்தமான ஆய்வு வடிவம் ஒன்றினைத் தெரிவு செய்து உமது தெரிவை நியாயப்படுத்துக.

(2 x 2 = 4 புள்ளிகள்)

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

உமது நியாயப்படுத்தலுடன் பொருந்தக்கூடிய மாதிரியெடுத்தல் வடிவத்தினை விளக்குக.

(2 x 2 = 4 புள்ளிகள்)

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

(iv) நீர் பயன்படுத்தவுள்ள தரவு சேகரித்தல் முறை மற்றும் தரவுப் பகுப்பாய்வு நுட்பங்கள் என்பனவற்றைக் குறிப்பிடுக.

(3 x 2 = 6 புள்ளிகள்)

2.

| நோக்கங்கள்/ கருதுகோள்கள்/ ஆய்வு வினாக்கள் | தரவு சேகரிக்கும் முறைகள் | தரவுப் பகுப்பாய்வு நுட்பங்கள் |
|---|---|---|
| 1. .................................. .................................. .................................. | .................................. .................................. .................................. | .................................. .................................. .................................. |
| 2. .................................. .................................. .................................. | .................................. .................................. .................................. | .................................. .................................. .................................. |
| 3. .................................. .................................. .................................. | .................................. .................................. .................................. | .................................. .................................. .................................. |
| வினா(ii)இல் தரப்பட்டுள்ளவாறு | | |

(v) ஆய்வின் முக்கியத்துவம் (4 புள்ளிகள்)

.. ....................................................................................................................

....................................................................................................................

....................................................................................................................

....................................................................................................................

..

(vi) எதிர்பார்க்கும் விளைவுகள்(குறைந்தது மூன்றாவது) (3 புள்ளிகள்)

1. ....................................................................................................................

2. ....................................................................................................................

3. ....................................................................................................................

(vii) உமது ஆய்வின் வரையறைகள்(குறைந்தது இரண்டாவது) (4 புள்ளிகள்)

1. ....................................................................................................................

2. ....................................................................................................................

3.

02. பின்வருவனவற்றில் ஏதாவது மூன்று பற்றி சிறு குறிப்புக்கள் எழுதுக.

(20 புள்ளிகள்)

(i) ஆய்வாளர் ஒருவருக்கு தரவு முக்கோணப்பகுத்தலின் (data triangulation) பயன்கள்.

(ii) தரவு சேகரிக்கும் ஒரு நுட்பமாக குவிமைய குழுச் சந்திப்பு(Focus group) கலந்துரையாடல்கள்.

(iii) உள்ளடக்கப்பகுப்பாய்வு: வித்தியாசமான நுட்பங்கள்.

(iv) கல்வியியலில் வரலாற்று ஆய்வு நடத்தல்.

(v) பங்குபற்றல் அவதானம்: ஆய்வாளர்களால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள்.

03. (i) "ஒரு தரவு சேகரிப்புக் கருவி என்ற வகையில் வினாக்கொத்தொன்று எத்தகைய ஆய்வுப் பிரச்சினைக்கும் இலகுவாகப் பொருந்தியிருத்தல் வேண்டும்".

ஓர் ஆய்வில் தரவு சேகரிப்புக்காக கருவியொன்றைத் தெரிவு செய்யும் பிரமாணத்தைக் கருத்திற்கொண்டு இக்கூற்றை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்க.

(10 புள்ளிகள்)

(ii) மூன்று வகையான அவதானங்களைக் குறிப்பிட்டு பொருத்தமான உதாரணங்களைப் பயன்படுத்தி அவைகளுக்கிடையேயான ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பிடுக.

(10 புள்ளிகள்)

04. (i) செயல்வழி ஆய்வு வடிவத்தின்(Action research design) பிரதான நான்கு பண்புக்கூறுளை விபரிக்குக.

(8 புள்ளிகள்)

(ii) செயல்வழி ஆய்வு வடிவத்தைப் பயன்படுத்தி ஆய்வு செய்யப் பொருத்தான குறிப்பான ஒரு பிரச்சினையைக் குறிப்பிட்டு மேலே குறிப்பிட்ட நான்கு பண்புக்கூறுகளையும் உள்ளடக்கியதாக உமது ஆய்வின் விரிவானதொரு புறவரைவொன்றை தயாரிக்குக. புறவரைவுக்கான கட்டமைப்பு கீழே தரப்பட்டுள்ளது:

(அ) ஆய்வுப்பிரச்சினை
(ஆ) நோக்கங்கள்
(இ) மாதிரி
(ஈ) தரவு சேகரித்தல்
(உ) தரவுப் பகுப்பாய்வு
(ஊ) அறிக்கை எழுதுதல்

(12 புள்ளிகள்)

4.

05. (i) ஆய்வாளர் ஒருவருக்கு சார்பிலக்கிய மீளாய்வொன்றினை நடத்துவதன் மூன்று குறிப்பான பயன்களை உதாரணங்கள் தந்து விபரிக்குக.

(10 புள்ளிகள்)

(ii) ஆய்வுச் செயன்முறையின் எந்தநிலையிலும் ஆய்வொழுக்கம் தொடர்பான பிரச்சினைகள் தோன்றலாம். பின்வரும் விடயங்கள் காரணமாக எழும் ஆய்வொழுக்கம் சார்ந்த பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக நீர் பின்பற்றும் செயன்முறைகளை உதாரணங்கள் தந்து விளக்குக.

(1) தரவு சேகரிப்பு முறை

(2) உமது ஆய்வில் பங்குகொள்வோரின் இயல்புகள்.

(10 புள்ளிகள்)

06. (i) பின்வரும் தலைப்புக்களின் கீழ் பரிசோதனை ஆய்வு வடிவத்தினதும் இனக்குழும விவரண(ethonographic) ஆய்வு வடிவத்தினதும் ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க. தேவையான இடங்களில் பொருத்தமான உதாரணங்கள் காட்டப்படல் வேண்டும்.

(அ) பிரதான பண்புக்கூறுகள்
(ஆ) ஆய்வொன்றினை நடத்துவதன் பிரதான நோக்கங்கள்
(இ) பின்பற்றப்படவேண்டிய குறிப்பான ஆய்வுச் செயன்முறை
(ஈ) தரவு சேகரிப்பு முறைகள்.

(5 x 4 = 20 புள்ளிகள்)

07. ஆய்வு நடத்தும்போது எதிர்கொள்ளப்பட்ட சில பிரச்சினைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

(அ) கள ஆய்வொன்றின் மூலமாக சேர்க்கப்பட்ட பெருமளவான தரவுகள்.

(ஆ) பரிசோதனை ஆய்வொன்றில் கட்டுப்படுத்த வேண்டிய பல மாறிகள்.

(இ) ஆய்வொன்றுக்காக மொத்த மாதிரியெடுத்தல் சட்டகம் கிடைக்காத நிலைமை.

(ஈ) தரவு சேகரித்தலின் போது ஆய்வாளரின் அகவயத்தன்மை.

(i) ஏதாவது இரண்டு பிரச்சினைகளைத் தெரிவு செய்து இப்பிரச்சினைகளுக்கு இட்டுச்செல்லும் காரணிகளை (ஒவ்வொன்றுக்கும் இரண்டு) விளக்குக.

(8 புள்ளிகள்)

(ii) இப்பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு நீர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை(ஒவ்வொன்றுக்கும் மூன்று வீதம்) விரிவாக விளக்குக.

(12 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)